**செய்தி வெளியீடு** **நாள்: 31.01.2025**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 2024 - 2025 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதிய நிலை குறித்தும், அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கும் திட்டங்கள் குறித்தும், நிறைவு பெற்ற திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் நூலகங்களின் நிலை குறித்தும் விரிவான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (31.01.2025) சென்னை, சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் 2024-2025ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதிய நிலை குறித்தும், அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கும் திட்டங்கள் குறித்தும், நிறைவு பெற்ற திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் நூலகங்களின் நிலை குறித்தும் விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்ரமணியன், திரு.ந.ரவிக்குமார், தலைமை நிர்வாக அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, டாக்டர் பிரின்சிலி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.